உ

குன்றக்குடித் தலவரலாறு



1950

திருவண்ணாமலை ஆதீனம்
குன்றக்குடி

உ

திருச்சிற்றம்பலம்

இஃது

இவ்வாலய பரம்பரை தருமகர்த்தா

44-வது மகா சந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ தெய்வசிகாமணி

ஆறுமுக தேசிக பரமாசாரிய சுவாமிகளின்

திருவுள்ளத்தின்படி

வெளியிடப்பெற்றது

1950

விலை அணு 0—2—0

திருப்புகழ்

தன தன தந்தத் தன தன தந்தத்
தன தன தந்தத் —தன நான

பிறர் புகழின் சொற் பயிலுமிளந்தைப்
பருவம தன்கைச் —சிலேயாலே

பிறவித ருஞ்சிக் கதுபெருகும் பொய்ப்
பெரு வழி சென்றக் —குணமேவிச்

சிறுமை பொருந்தி பெருமை முடங்கிச்
செயலு மழிந்தற் —பமநான

தெரியவர் தங்கட் கயலே விரும்பிச்
சில சில பங்கப் —படலாமோ

கெறுவித வஞ்சக கபடமோ டெண்டிக்
கிலு மெதிர் சண்டைக் —கெழுசூரன்

கிளையுடன் மங்கத் தலேமுடி சிந்தக்
கிழிபட ஒன்றிப் —பொருதோனே

குருமுனி இன்பப் பொருள்பெற அன்றுற்
பன மனுவுஞ்சொற் —குருநாதா

குலகிரி துங்கக் கிரியுயர் குன்றக்
குடிவளர் கந்தப் —பெருமானே

—அருணகிரிநாதர்.

குன்றக்குடித் தலவரலாறு

1. தலமும் இருப்பிடமும்

இளமையே கோலமாய், அழகே உருவமாய் கருணேயே வடிவமாய். வான்பழித் திம்மண்புகுந்து மனிதரை ஆட்கொள்ளும் வள்ளலாக ஆறுமுகப் பெருமான் எழுந்தருளியுள்ள தலங்கள் பல, எனினும் குறிஞ்சிக்கிழவனுக விளங்கும் குமரன் குன்றுகள் தோறும் இருந்து அருள் வழங்குகின்ருன். இத்தகைய குன்றுகளுள் இக்குன்றக்குடி பாண்டிய நாட்டில் இராமநாதபுரம் மாவட்டத்தில் திருப்புத்தூர்க் கூற்றத்தில் திருச்சிராப்பள்ளியிலிருந்து தனுஷ்கோடி செல்லும் புகைவண்டிப் பாதையிலுள்ள காரைக்குடி புகைவண்டி நிலேயத்திலிருந்து மேற்கே 7 கல் தொலேவிலிருக்கிறது. உந்தூர்சி (பஸ்) வசதி உண்டு.

2. தலப்பெயர்கள்

மயூர நகரம், அரசவனம், கிருஷ்ண நகரம் மயில்மலே (மயூரகிரி) குன்றக்குடி எனப் பல பெயர்கள் இத் தலத்துக்கு வழங்கப்பெறுகின்றன.

1. மயூரநகரம் :— முருகப்பெருமானது ஊர்தியாகிய மயிலுக்கு இங்கு சாபவிமோசனம் ஏற்பட்டதாலும் அம்மயில் பூஜித்துப் பேறுபெற்றதாலும் மயூர நகரமெனப் பெயர் வந்தது.

2. அரசவனம்:- அரசமரங்களின் மிகுதி காரணமாக அரசவனமெனப் பெயர் வந்தது.

3, கிருஷ்ணநகரம்:- கிருஷ்ணமூர்த்தி இங்கு எழுந்தருளியுள்ள முருகப்பெருமான் மீது பேரன்புகொண்டவராகிப் பாண்டவர்களை வழிபாடாற்றுப்படி சொல்லியதால் கிருஷ்ணநகரமெனப் பெயர் வந்தது.

4. மயில்மலை:- முருகனது மயில் அப்பெருமானது சாபத்தால் மயிலுருவத்தில் மலையாக இருந்து சாப விமோசனம் பெற்றதினால் மயில்மலை எனப் பெயர் வந்தது. இன்றும் மலையின் தோற்றம் மயிலுருவத்திலேயே காட்சி அளிக்கிறது.

5. குன்றக்குடி:- குன்றை தன்னிடத்தேகொண்ட ஊராக விளங்குவதனால் குன்றக்குடி என்னும் பெயர் வந்தது.

3. கோயிலமைப்பு

ஆலயம் ஊருக்கு நடுவில் மலையின்மேல் அமைந்திருக்கிறது இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு ஒன்று மலைக்கோயிலென்றும், மற்றொன்று கீழைக் கோயிலென்றும் அழைக்கப் பெறுகின்றன. மலைக் கோயிலில் முருகப்பெருமான் ஆறுமுகங்களோடு மயில் வாகனத்தில் கிழக்கு முகமாக எழுந்தருளி இருபக்கங்களிலும் தனித்தனியே மயில் வாகனத்தில் வள்ளியம்மையார், தெய்வயானையம்மையார் அமர்ந்திருக்கக் காட்சியளிக்கின்றார். சந்நிதிக்கு தென் புறத்தில் சலவைக் கற்களால் அழகுற அமைக்கப் பெற்ற அலங்கார மண்டபத்தில் திருவுலா மூர்த்தி ஆறு திருமுகங்களோடும் மயில் ஊர்தியோடும் எழுந்

தருளியிருக்கின்றார் பிரகாரத்தில் நால்வர், விநாயகர், தென்முகக்கடவுள் குழந்தைவடிவேலர், கூத்தப்பெருமான், நவக்கிரகங்கள், சண்டேசுரர் முதலிய மூர்த்திகள் எழுந்தருளியிருக்கின்றார்கள். மலையின் மேல் முன் மண்டபத்தில், வீரபாகுவும், இடும்பனும் எழுந்தருளியிருக்கின்றார்கள். நுழைவாயிலில் தோகையடி விநாயகர் எழுந்தருளி இருக்கின்றார் நுழைவாயலில் மயில் தோகை வடிவாதலால் அதனருகில் வீற்றிருக்கும் தந்திமுகருக்கு "தோகையடி விநாயகர்" என்று பெயர் வழங்குகின்றது.

மலையடிவாரத்தில் தென்மேற்கு திசையில் கிழக் கோயில் அமைந்திருக்கிறது. சுவாமியும் அம்மனும் கிழக்கு முகமாக எழுந்தருளியுள்ளார்கள். கோயிலின் பெரும் பகுதி மலையிலேயே தோண்டி அமைக்கப் பெற்றதாகும். இக்கோயிலுக்கு நேர் தெற்கில் மடைப் பள்ளி இருக்கிறது. நேர் மேற்கிலுள்ள திருநாள் மண்டபத்தில் கோயில் அலுவலகம் இருக்கிறது.

4. மூர்த்திகள்.

1. முருகன்:- ஆறுமுகங்களோடு எழுந்தருளி அருள் வழங்குவதால் ஆறுமுகக்கடவுள்.

2. சுவாமி:- தேனூற்றுநாதர், சுயம்புமூர்த்தி; அகத்தியரால் பிரதிஷ்டை செய்யப்பெற்று வழிபாடு செய்யப்பெற்றது.

3. அம்மை:- அழகம்மை.

5. தலப்பெருமை.

மயில் வழிபட்டு சாரூபம் பெற்றது. கிருஷ்ண மூர்த்தி, வசிஷ்டர், விசுவாமித்திரர், நாரதர், நான்முகன், கருடன். தேவேந்திரன், சூரியன், மன்மதன் முதலியவர்கள் வழிபட்டதும் அகத்தியமுனிவர் பூஜித்ததும் பாண்டவர்கள், வழிபட்டதும், கலிங்க தேசத்து இடும்பன் என்ற அசுரன் காவடி எடுத்து வழிபட்டு வயிற்றுவலி நீங்கப்பெற்றதுமாகிய பெருமைகளையுடையது.

6. புராண வரலாறு.

மயில் பேருபெற்றது;- சிவபெருமான் தன் சக்தியை இருபாகமாக்கி ஒரு பாகத்தை போக சக்தியாகவும், மற்ருெரு பாகத்தை முருகக்கடவுளாகவும் ஆக்கி ஞானசக்தியை முருகக் கடவுளுடைய இருதயத்தில் பதித்து, இச்சா சக்தியையும் கிரியா சக்தியையும் படைக்கலங்களாகக் கொடுத்து, ஞான சக்திதரன், குகன், விசாகன் என்னும் திருநாமங்களைக் கொடுத்தருளி, கயிலையின் இடப்பாகத்தில் இருந்துகொண்டு ஐந்தொழிலைச் செய்துவருக என்றருளி, வாகனமாக மயிலையும், துணையாக ஜயந்தன் முதலிய கணங்களையும் கொடுத்தார். இங்ஙனம் முருகப்பெருமான் எழுந்தருளி இருக்குங்காலத்தில் பெருமானது தெரிசனத்துக்காக வந்த நான்முகன் முதலிய தேவர்கள் வாசலில் நின்ற மயிலினிடத்தில் முருகனது ஊர்தியாகப் பேறு பெறுதற்காக சூரன், தன் தம்பிகளுடன் காஞ்சிபுரத்தில் தவம் செய்துகொண்டிருக்கின்ருன் என்று சொன்னுர்கள். இதனை கேட்ட மயில் மனம் வருந்தி முருகப்பெருமானை தியானிக்க பெருமான்,

தவத்திலிருந்த சூரன் முதலிய நால்வரையும் கணங்க ளாக்கி அருகில் வைத்துக்கொண்டார்.

பின்னர் ஒருசமயம் தெரிசனத்திற்கு வந்த நான் முகன், திருமால் முதலிய தேவர்களை சூரனுதியோர் பழிவாங்கும் எண்ணத்தோடு, மயிலினிடம் சென்று அன்னமும், கருடனும் வேகமாய்ப் பறந்து செல்லு வதில் தங்களைக்காட்டிலும் மயிலுக்குச் சாமர்த்திய மில்லையென்று குறைவாகப் பேசியதாகச்சொல்ல, மயில் கோபங்கொண்டு அன்னத்தையும், கருடனையும் விழுங்கி விட்டது. தெரிசனம் முடிந்து திருப்பிய நான்முக னும் திருமாலும் தங்கள் வாகனங்களைக் காணுது முருகப்பெருமானிடம் முறையிட. பெருமான் நடந் ததை உணர்ந்து மயிலை வாகனங்களைக் கக்கும்படி ஆணையிட நான்முகனும் திருமாலும் தங்கள் தங்கள் வாகனங்களில் ஏறி இருப்பிடஞ் சென்ருர்கள். அடிய வர்களுக்கு இடையூறு செய்ததின் காரணமாக மயிலை மலையாகும்படி சபித்தார். முருகப்பெருமான் மயில் குறையிறந்து வருந்த முருகப்பெருமான் பாண்டிய நாட்டில் அரசவனத்தில் (குன்றக்குடியில்) மலையாக இருக்கும்படியும், அங்குவந்து சாபவிமோசனம் செய்வ தாகவும் அருளினுர். கோள் சொன்ன சூரனுதிய கணங்களை அசுரர்களாகும்படி சபித்தார். அவர்கள் அசுரர்களாகப் பிறந்து, அறத்திற்கு மாறுபட்ட செயல்களைச் செய்து தேவர்களைத் துன்புறுத்த சிவ பெருமானது திருவுள்ளப்படி முருகப்பெருமான் ஆறு முகங்களோடு தோன்றி சூரன் முதலிய அசுரர்களை அழித்தார். பின்னர் முருகப்பெருமான் குன்றக்குடிக்கு வந்து மயிலினது சாபத்தை நீக்கி மயிலை இரண்டு பாகமாக்கி ஒருபாகத்தை சாரூப பதவி அடையும்படிக் கும், மற்ருெரு பாகத்தை மலையாக இருக்கும்படிக்கும் அருள் செய்தார். மயிலினது வேண்டுகோளுக்கிணங்கி

மயிலுருவத்திலமைந்த மலையில் முருகப்பெருமான் எழுந்தருளியிருந்து உயிர்களுக்கு வற்ருத, முற்ருத பேரின்பப் பெருவாழ்வை வழங்குகின்ருர்.

அகத்தியர்:- சிவபெருமானது ஆணைப்படி அகத்திய முனிவர் சண்முகப்பெருமானை வழிபட்டு திருவருளுக் குரியவரானுர்.

வசிஷ்டர்:- கௌசிக முனிவரது சாபத்தால் நீசத் துவத்தை அடைந்தனர். வசிஷ்டமுனிவரின் புதல்வர் கள் வசிஷ்கர் ஸ்ரீ ஷண்முகப்பெருமானை வழிபட்டு புதல்வர்களுக்கு ஏற்பட்டிருந்த சாபத்தை நீக்கிக் கொண்டார்.

விசுவாமித்திரர்:- வசிஷ்ட முனிவரது புதல்வர்களுக்கு கொடிய சாபத்தைக்கொடுத்த பாபத்தை ஸ்ரீ சண்முக பெருமானை வணங்கி நீக்கிக்கொண்டு ஞானத்தையும் பெற்று விளங்கினுர்.

பிர்ம்மா:- சிவபெருமானது முடியைத் தேடிக்கண்ட தாகப் பொய்சொல்லிய பாபத்தை ஸ்ரீ ஷண்முகப் பெருமானை வணங்கி நீக்கிக்கொண்டு, உலகம் நித்திய, நைமித்திய, காமிய கருமங்களிலும், பிராமணருடைய வடிவத்திலும் பூஜிக்கும் வரத்தையும் பெற்றுக் கொண்டார்.

கருடன்:- கருடன் ஸ்ரீ சண்முகப் பெருமானை வணங்கி அவரது அருளைத் துணையாகக்கொண்டு அமுதத்தைப்பெற்று கத்துரு என்பவனின் புதல்வர்க ளாகிய நாகர்களிடம் அடிமைப்பட்டிருந்த தனது தாய் விந்தையை விடுவித்தான்.

இந்திரன்:- இத்தலத்தில் ஸ்ரீ சண்முகப்பெருமானை வழிபட்டு அவரது திருவருளால் மூசி என்னும் அசுரனை வென்ருன்.

சூரியன்;- தன்னை விட்டுப்பிரிந்து குதிரை வடிவத்தோடு குருகண்டத்தில் இருந்து வந்த தனது மனைவி உஷா தேவியைச்சேர ஸ்ரீ சண்முகப்பெருமானை வணங்கி வழிபட்டு அடைந்து இன்பவாழ்வு வாழ்ந்தனன்.

மன்மதன்:- இத்தலத்தை வழிபட்டு ஸ்ரீ சண்முகப் பெருமானது திருவருளால் உலகமனைத்தையும் வெற்றி கொள்ளும் பேற்றைப் பெற்ருன்.

பாண்டவர்:- கிருஷ்ணமூர்த்தியினுடைய ஆணைப்படி பாண்டவர்கள் இத்தலத்தை வழிபட்டு சண்முகப் பெருமானது திருவருளால் துரியோதனுதிகளைப் போரில் வென்றனர்.

நாரதர்;- ஸ்ரீ சண்முகப்பெருமானை விதி முறைப்படி வணங்கி வழிபட்டு இன்பப் பெருவாழ்வு பெற்ருர்.

இடும்பன்:- கலிங்க தேசத்து இடும்பனென்னும் அசுரன் வயிற்று வலியினுல் மிகவும் வருந்தி மயில்மலை முருகப்பெருமானிடத்தில் மிகவும் அன்பு கொண்டவனுய் கிரவுஞ்ச கிரியைக் காவடியாகக்கொண்டு வந்து பிரார்த்தனை செய்ய வயிற்றுவலிநீங்கி ஆலயத்திலே பக்த கோடிகளுள் ஒருவராக இருக்கின்ருன்.

7. தீர்த்தங்கள்

சரவணப்பொய்கை, மதுபுஷ்பகரனி, மயில் தீர்த்தம், சக்தி தீர்த்தம், பாண்டவர் தீர்த்தம், தேனுறு, ஷண்முகநதி முதலிய தீர்த்தங்கள் இருக்கின்றன.

சரவணப்பொய்கை:- மலையடி வாரத்தில் தென்மேற்கிலுள்ளது மயிலானது வேண்டுகோளுக்கிணங்கி ஷண்முகப்பெருமானால் தோற்றுவிக்கப்பெற்ற இத்தீர்த்தத்தில் மூழ்கி உள்ளன்போடு ஸ்ரீ சண்முகப் பெருமானை வழிபடுகின்றவர்கள் நோய் நீக்கம், பிள்ளைப்பேறு முதலிய எல்லாப்பேறுகளையும் பெற்று இன்புறுகிறார்கள்.

பாண்டவர் தீர்த்தம்:- இத்தீர்த்தம் மலையின்மேல் மேற்குப்பக்கத்தில் உள்ளது, பாண்டவர்களால் பூஜைக்காக அமைக்கப்பட்டதாதலால் பாண்டவர் தீர்த்தம் என்று அழைக்கப்பெறுகிறது.

தேனுறு:- ஊருக்கு வெளியில் கிழக்கே அரைகல் தொலையிலுள்ளது அகத்தியர் தாம் பிரதிஷ்டை செய்த சிவலிங்கத்திற்கு அபிஷேகித்த தேன் ஆறுகப் பெருகியதாக வரலாறு

8. வழிபட்டோர்கள்

கிருஷ்ணபகவான், வசிஷ்டர், விசுவாமித்திரர், நாரதர் பிரம்மா, கருடன், தேவேந்திரன், சூரியன், மன்மதன், பாண்டவர், மயில் இடும்பன் முதலியோர் வழிபட்டுப் பற்பல பேறுகளைப் பெற்றுள்ளார்கள். சுதந்திரக் கிளர்ச்சியில், சிறந்த வீரர்களாக விளங்கிய மருது

சகோதரர்கள் ஸ்ரீ சண்முகப்பெருமானிடத்தில் அகங் குழைந்த பக்தியையுடையவர்களாயிருந்து பல திருவாபரணங்கள் செய்து வைத்திருக்கின்றனர்.

9. சுத்துக்கோயில்கள்

வீரமகாளியம்மன் என்றொரு தேவி கோயிலுண்டு கண் கண்ட தெய்வமாக விளங்கி பக்தர்களுக்கு பேரருள் விளங்குகின்ற பெருமை இத் தேவியாருக் குண்டு, விசேட உத்சவங்களும் நடைபெறுகின்றன.

10, மண்டபங்கள்,

மலையடிவாரத்தில் இரண்டு பெரிய திருநாள் மண்டபங்கள் இருக்கின்றன.

11. சிற்பங்கள்.

கிழக்கோயில் மலையிற்குடைந்து அமைக்கப் பட்டதாகும். இதில் மலையிலேயே அமைக்கப்பட்ட ஐந்து சிவலிங்கங்களிருக்கின்றன, மலைக்கொழுந்தீசர் சன்னதியில் அழகான பல உருவங்கள் செதுக்கப் பட்டிருக்கின்றன அவற்றுள் துவார பாலகர்கள், வலம்புரி விநாயகர், திருமால், பிரம்மா. ஈசுவரன், துர்க்கை சங்கர நாராயணராகும் அவற்றுள் சிவபெருமானின் திருக்கூத்திலுள்ள சிலை ஒன்று மிக அழகாக கண் கவரத்தக்க முறையில் அமைந்திருக்கின்றது. பொது வாக கிழக்கோயில் சிற்பக்கலைக் களஞ்சியமாக விளங்குகின்றது.

12. நித்திய பூஜைகளும் திருவிழாக்களும்

குமார தந்திர முறைப்படி நாடோறும் ஐந்து கால பூஜைகள் நடைபெறுகின்றன. கிருத்திகை ஏறுபடியும் ஏனைய மாத ஏறுபடியும் நடைபெறுகின்றன. ஸ்கந்தசஷ்டிவிழா, தைபூசத்திருவிழா, பங்குனி உத்திர விழா முதலிய ஏறுபடிகள் சிறப்பாக நடைபெறுகின்றன.

13 திருப்பணி

ஆதி இராமனாதபுர சமஸ்தான சேதுபதிகளால் திருப்பணி செய்யப்பட்டது. பின்னே ஒருவரும் பெரிய திருப்பணிகள் செய்ததாகத் தெரியவில்லை திருக் கயிலாய பரம்பரைத் திருவண்ணாமலை ஆதீனத்தில் 43வது மகாசன்னிதானமாக எழுந்தருளி இருந்த ஸ்ரீலஸ்ரீ தெய்வசிகாமணி பொன்னம்பல தேசிக பரமாசாரிய சுவாமிகள் காலத்தில் கண்டரமாணிக்கம் பெரி, சோமசுந்தரம் செட்டியார் அவர்களால் சில்லரைப் பழுதுகள் பார்க்கப்பெற்று 1939ம் ஆண்டில் கும்பாபிஷேகம் செய்யப்பெற்றது.

14. சமயப்பணி.

விசேஷ நாட்களிலும் உத்சவ காலங்களிலும் தக்க அறிஞர்களைக் கொண்டு சமயச் சொற்பொழிவுகள் செய்விக்கப் பெறுகின்றன.

15 நிர்வாகம்.

குன்றக்குடி; திருக்கயிலாய பரம்பரைத் திருவண்ணுமலை ஆதீன பரிபாலனத்திற்குட்பட்ட தேவஸ்தானங்களுள் ஒன்று. ஆதீன கர்த்தரவர்களாக எழுந்தருளியிருக்கும் ஸ்ரீலஸ்ரீ தெய்வசிகாமணி ஆறுமுக தேசிக பரமாசாரிய சுவாமிகள் ஆதீனகர்த்தர் ஸ்தானத்தை வகிக்க ஆரம்பித்தது (30—5—46) முதல் இவ்வாலயத்தையும் பரிபாலனம் செய்து வருகின்ருர்கள்

16· கல்வெட்டுகள்

கீழ்கோவிலில் நிறைய கல்வெட்டுகள் இருக்கின்றன. அரசியலார் வந்து பிரதி எடுத்துச்சென்றிருக்கின்ருர்கள்.

17. புராணங்களும், திருப்பாடல்களும்

தென்மொழியிலும், வடமொழியிலும் புராணங்கள் இருக்கின்றன. அருணகிரி நாதர் அருளிய திருப்புகழ் பாடல்களும் மற்றும்பல புலவர்களால் பாடப்பெற்ற மயூரகிரிக் கலம்பகம், மயூரகிரியில் மயூரகிரிக்காதல், சண்முகநாதர் உலா, மயூரகிரிக்கோவை, மயூரகிரிப்பிள்ளைத் தமிழ், மயின்மலைப்பிள்ளைத் தமிழ் எனப் பலப் பிரபந்தங்களும் தனித்தனி தோத்திரப்பாக்களும் உள்ளன.

கிடைக்குமிடம்:-

ஆலய அலுவலகம்

குன்றக்குடி

இராமனுதபுரம் மாவட்டம்

தபால் சிலவு 0—0—9

கண்ணபிரான் பவர் பிரஸ், திருப்புத்தூர் R. D.